பக்கங்கள் 23+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 17 சனிக்கிழமை 02.08.2025 | அதிர்வு 002

## தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுக்கொலை



தென்னிலங்கையில் இன்று பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

06▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழ்த் தேசியப் பேரவை தயாரித்த ஆவணத்தில் தமிழரசு ஒப்பமிடாது!

## யாழில் சுமந்திரன் இன்று அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்ப என்ற பெயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட்ட தமிழ்த் தேசியப் பேரவை தயாரித்த கடிதத்தில் - ஆவணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒப்பமிடாது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் முடிவை இன்று அறிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும், அரசியல் விடயங்களைக் கையாள்வதற்கு மத்திய செயல் குழுவினாலே நியமிக்கப்பட்ட ஏழுபேர் கொண்ட குழுவும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தமிழரசுக் கட்சியின்

06▶



# தமிழர் தெருவிழாவை மிகச் சிறப்பாக நடத்த அனைவரும் ஒன்றிணைந்து தோள்கொடுங்கள்

## கனடிய தமிழர் பேரவை வேண்டுகோள்

தமிழர் தெருவிழாவை இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடத்த அனைவரையும் ஒன்றிணைந்து தோள்கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம் என்று கனடிய தமிழர் பேரவை அறி வித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:–

“கனடியத் தமிழர்களாக நாங்கள் மிக பெருமையாகவும் சிறப்பாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் தமிழர் தெருவிழா உலகின் மிகப்பெரிய தமிழர் திருவிழாவாக ஒரு தசாப்த காலத்திற்குள் வளர்ந்திருக்கின்றது. பல்லின மக்களுடன் வாழும் கனடிய தேசத்தில், தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, வரலாறு, உணவுகள் மற்றும் அடையாளங்களை வெளிக்கொண்டு வரும் ஒரு மிகப் பெரும் தளமாக திகழ்கின்ற தமிழர் தெருவிழா இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

டொரோண்டோ மாநகரின் மிகப்பிரத ான வீதிகளில் ஒன்றான மார்க்கம் சாலையில் இரண்டு நாட்களுக்கு மிக சிறப்பாக நடைபெறுகின்ற தமிழர் திருவிழாவிற்கு ஆண்டுதோறும் பல்லா யிரக்கணக்கான மக்கள் வருகை தருவதுண்டு. பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடக்கும் தமிழர் தெருவிழா மூலம் நமது தமிழ் வணிகர்கள், சேவை வழங்குநர் கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் என பலரும் நன்மையடைந்துள்ளனர். இன்று பிரபலமாக இருக்கின்ற கனடிய தமிழ் கலைஞர்கள் பலருக்கு தமிழர் தெருவிழா வாய்ப்புக்களை வழங்கி ஊக்குவித்து வந்துள்ளது.

தமிழர் தெருவிழா என்பது ஒரு இலாப நோக்கற்ற, தமிழர்களாக நமது அடையாளங்களை பெருமையுடன் கொண்டாடும் ஒரு தெருத்திருவிழா ஆகும். ஆனால், கடந்த ஆண்டு நடைபெற்றதமிழர் தெருவிழாவின்போது புறக்கணிப்பு முயற்சிகள் இடம்பெற் றிருந்தது கவலைக்குரியதாகும்.

சென்ற ஆண்டில் நடந்த குழப்பங் களை ஆக்கபூர்வமாக கையாண்டு எமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுக ளிற்கான ஒரு தீர்வை பெற்று இவ் வாண்டு தமிழர் தெருவிழாவை அமை தியுடனும், ஒற்றுமையுடனும் நடாத்தும் நோக்கில், கடந்த ஆண்டு புறக்க ணிப்பை பகிரங்கமாக கோரிய தமிழர் தேசிய மக்கள் அவையுடனும் கனடிய தமிழர் கூட்டு பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக கனடிய தமிழர் பேரவை நேரடி சந்திப்புகளையும், பேச்சுவார்த் தைகளையும் நடத்தியிருந்தது.

அந்தவகையில் கனடிய தமிழர் தேசிய அவை பிரதிநிதிகள் மோகன்




இராமகிருஸ்ணன், தேவா சபாபதி, றொனால்ட் ஜெயரட்ணம், மேல்வின் மரியதாஸ் ஆகியோருடன் கடந்த ஞாயிறுக்கிழமை அன்று பேச்சுவார்த் தைகள் இடம்பெற்றிருந்தன. இதில் கனடிய தமிழர் பேரவை சார்பாக கனடிய தமிழர் பேரவையின் தலைவர் குமார் ரத்னம், கனடிய தமிழர் பேரவையின் இயக்குனர் சபை உறுப்பினர் ரவி ஆத் மன், ஆலோசனைக்குழு உறுப்பினர் சிவன் இளங்கோ மற்றும் நிர்வாக இயக்குனர் டன்ரன் துரைராஜா ஆகி யோர் பங்குபற்றியிருந்தனர்.

அதுமட்டும் அல்லாது கனடிய தமிழர் பேரவை மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனங்களுக்காக நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் நடவடிக் கைகளையும் விளக்கியிருந்தோம். அந்த வகையில் உலகத்தமிழர் பேரவை யின் அங்கத்துவத்தில் இருந்து கனடிய தமிழர் பேரவை முழுமையாக விலகி விட்டதையும், இமாலய பிரகடனத்தை கையளிக்கும்போது உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்களுடன் கனடிய தமிழர் பேரவையின் ஆலோசகர் ராஜபக்க்ஷவுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்துக்காக பல தடவைகள் பகிரங்கமாக மன்னிப்புகள் கூறியிருந்த தையும், அந்த புகைப்படத்தில் இருந்த ராஜ் தாவரட்ணசிங்கம் குறித்த செயற்பாட்டிற்குப் பொறுப்புக்கூறும் விதமாக தனது ஆலோசகர் பதவியில் இருந்தும், கனடிய தமிழர் பேரவையின் அங்கத்துவத்தில் இருந்தும் விலகிக் கொண்டார் என்பதையும் விளக்கி யிருந்தோம். அதனுடன் அவ்வாறான தவறுகள் இனியும் நடக்காமல் இருப் பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்பதையும் அவர்களது கருத்துக்களையும் உள் வாங்கி தொடர்ச்சியான உரையாடல் களை மேற்கொண்டு புரிந்துணர்வுடன் பயணிக்க முடியும் என்ற எண்ணத்தை முன்வைத்திருந்தோம்.

அதேபோல கனடிய தமிழர் கூட்டு பிரதிநிதிகள் திருவாளர்கள் அபி சிங்கம், மரியோ புஸ்பரட்ணம், அமல்ர ாஜ் யோசப், நிருஜன் குணாளன், தீபன் ராஜ் ஆகியோருடனும் பல வாரங்களாக நேரடி சந்திப்புகள் மூலமாகவும், இணை யவழி தொடர்பாடல்கள் மூலமாகவும் கலந்துரையாடல்களை மேற்கொண் டிருந்தோம். இதில் கனடிய தமிழர் பேரவையின் இயக்குனர் சபையில் இருந்து தலைவர் குமார் ரத்னம், இயக்குனர்சபை உறுப்பினர்கள் ரவி ஆத்மன், டில்ஷான் நவரத்னராஜா, ஆலோசகர் சபை உறுப்பினர் சிவன் இளங்கோ மற்றும் நிர்வாக இயக்குனர் டன்ரன் துரைராஜா ஆகியோர் வெவ் வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை கைய மேற்கொண்டிருந்தனர். இதன் போது பல சுற்று பேச்சுவார்த்தைகளில் பல இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில் எங்கள் சமூகத்தில் தெளிவும் நம்பிக்கையும் நிலைநிறுத் தப்படுவதற்காக, ஒரு சுயாதீன பரிசீல னைக் குழுவை உருவாக்கி அதில் அவர்களின் பிரதிநிதித்துவமும் உள் வாங்கப்படும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டிருந்தது. இந்தக்குழு கனடிய தமிழர் பேரவையின் யாப்பு, வெளிப் படைத்தன்மை, பொறுப்புக்கூறல், உறுப்புரிமை என்பனவற்றின் மறுசீர மைப்புக்கான பரிந்துரைகளை ஆறு மாத காலத்திற்குள் பரிந்துரைக்கும் எனவும் அந்த பரிந்துரைகளை கவனத் தில் கொண்டு உரிய மாற்றங்களை கனேடியத் தமிழர் பேரவை மேற்கொள் ளும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மக்களின் உணர்வுகளுகளுக்கு மதிப் பளிப்பதற்கும் அவர்களின் கரிசனை களை உள்வாங்கி செயல்படுவதற்கும் கனேடியத் தமிழர் பேரவை பற்றுதி கொண்டுள்ளது.

கனடிய தமிழர் பேரவை இந்த இரு அமைப்புக்களுடனும் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொள் ளவும், அவர்களின் நியாயமான கோரிக் கைகளை உள்வாங்கி செயற்படுத்தவும், ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளவும் தயாராகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின் றோம். அதுமட்டும் அல்லாது கனடிய தமிழர் பேரவையின் வெளிப்படைத் தன்மையை கடைபிடிக்க 2025 ஆம் ஆண்டு முதல் கனடிய தமிழர் பேரவை யின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கையை பொதுவெளியில் வெளியிடவும் தீர்மானித்துள்ளோம். நாங்கள் இணங்கியிருந்த சுயாதீன குழுவை அமைத்து அந்தக்குழு தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது என்ப தையும் அறியத்தருகின்றோம்.

2015 இல் தமிழர் தெருவிழா ஆரம் பிக்கப்பட்டதில் இருந்து இந்த தெருத் திருவிழா கனடிய தேசத்தில் உள்ள ஒவ்வொரு தமிழர்களையும் பெருமைப் படுத்தும், ஒவ்வொருவரும் ஆவலாக எதிர்பார்க்கும் ஒரு சிறந்த நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அனைத்து மட்டங்களிலும் உள்ள அரசியல் தலைவர்களும் கூட தமிழர்

தொடர்ச்சி▼

# முரசின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா






'முரசு' டிஜிட்டல் நாளிதழின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, முரசின் அலுவலகத்தில் இன்று கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. இதில் முரசின் நிர்வாகப் பிரிவினர் மற்றும் ஆசிரியர் பீடத்தினர் கலந்துகொண்டனர்.




## தமிழர் தெருவிழாவை...

தொடர்ச்சி▲

தெருவிழாவிற்கு அவர்களாகவே விரும்பி வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். கனடிய பிரதமர் ஒருவர் தமிழ் விழா ஒன்றில் முதன்முறையாக கலந்து கொண் டதும் தமிழர் தெருவிழாவிலேயே ஆகும்.

நாம் கனடிய மண்ணில் தமிழர்களாக நாகரீகத்துடனும், ஒழுக்கத்துடனும் பெருமைக்குரிய ஒரு சமூகமாக வளர்ந்துள்ளோம். எமது கலைகளையும், பண்பாட்டையும், வரலாற்றையும், உணவுப்பழக்கங்களையும் பெருமையாக கொண்டாடும் தமிழர் தெருவிழா தலைமுறைகள் தாண்டியும் கொண்டாடப்பட வேண்டியது. தமிழர் தெருவிழாவை அதே பெருமையுடன் அடுத்த தலைமுறையினருக்கு கையளித்து செல்லவேண்டிய பொறுப்பு தமிழர்களாக எங்கள் அனைவருக்கும் உண்டு. இந்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழர் தெருவிழாவிற்கு உங்கள் அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம். தமிழர் தெருவிழா கனடாவில் வசிக்கும் அனைத்து தமிழர்களினதும் பெருவிழா. கனடியத்தமிழர்களின் அடையாளம். தமிழர் தெருவிழாவை இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடத்த அனைவரையும் ஒன்றிணைந்து தோள்கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்."
– என்றுள்ளது.



# யாழில் தமிழரசின் முக்கிய கூட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுக்கூட்டம்யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம், மார்டின் வீதியில் உள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்களைக் கையாளவென கட்சியால் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேர் கொண்ட குழுவும் ஒன்றுகூடி பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடின. இந்தக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கட்சியின் முக்கியஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், து.ரவிகரன், க.கோடீஸ்வரன், ப.சத்தியலிங்கம், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் கே.துரைராஜசிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





# யாழில் வாள்வெட்டு! ஒருவர் படுகாயம்!!



யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சபாபதிப்பிள்ளை வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தனியாகச் சென்ற ஒருவர் மீது ஓட்டோவில் வந்த மூவர் அடங்கிய குழுவினர் இந்த வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## தமிழ்த் தேசியப்...

தலைமையகத்தில் இன்று பகல் ஓர் விசேட கலந்துரையாடலை நடத்தினர். இதன் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்னொரு தரப்புத் தயாரித்து எமது மேசையில் வைத்த ஆவணத்தில் நாம் கையொப்பம் இடவில்லை. நாம் அதை விட தீர்க்கமாகப் பல விடயங்களை ஆராய்ந்து – சொல்ல வேண்டிய முறையில் – சொல்ல வேண்டிய தருணத்தில் – தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சி என்ற வகையில் அதை வெளிப்படுத்துவோம்." – என்றார் அவர்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசியல் தீர்வு தொடர்பில், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில், கலந்துரையாடினோம். இந்த அரசாங்கம் பதவிக்கு வரும்போது புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு ஒன்று முன் வைப்போம் என்ற வாக்குறுதியுடன் வந்திருக்கின்றார்கள். ஆனால் தற்போது வரை அது குறித்துப் பேச்சு ஏதும் அரசுப் பக்கத்தில் இருந்து கிடையாது. சென்ற வாரம் பிரதமர் ஏதோ கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்குவது தொடர்பிலும் எமது கவனத்தைச் செலுத்துவோம். ஏனெனில் ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் இந்த விடயத்திற்காக எம்மோடு இணைந்து செயல்பட்டனர். மாற்றுச் சட்டங்களை முன்னைய அரசாங்கங்கள் கொண்டு வந்தபோது மாற்று எதுவுமே தேவையில்லை என அவர்கள் வாதிட்டனர். ஆனால் தற்போது மாற்றுச் சட்டம் குறித்துப் பேசுகின்றனர். எனவே நாம் இதை கடுமையாக எதிர்க்கின்றோம்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசு உடனடியாக தனது தீர்வை முன் வைக்க வேண்டும். அதுவரை மாகாண சபைகள் இருக்கின்றபடியே இயங்குவதற்கு நாங்கள் ஏது செய்வோம் என எமது அலுவலக வாசலில் வைத்து ஜனாதிபதியாக முன்னர் அநுரகுமார திஸநாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதனை துரிதமாக – காலத்தை இழுத்தடிக்காது செய்ய வேண்டும். மாகாண சபைத் தேர்தலுக்குத் தடையாக உள்ள சட்ட திருத்தத்தை மேற்கொண்டு அதனை நிறைவேற்ற வேண்டும்.



எதிர் வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் சம்பந்தமான தீர்மானத்தின் காலம் நிறைவடைகின்றது. அதனால் அது நீடிக்கப்பட வேண்டும். இதைக் கூறினால் அரசிற்கு கால அவகாசம் நாம் பெற்றுக் கொடுப்பதாகக் கூறுவார்கள். அது அப்படி அல்ல. சர்வதேச மேற்பார்வையைத் தொடர்ந்து தக்க வைப்பதாக இருந்தால் இன்னுமொரு தீர்மானம் திறைவேற்றினால் மட்டுமே மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் அந்த மேற்பாவையை மேற்கொள்ளலாம். அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வருவதாகப் பிரித்தானியா வாக்குறுதியளித்துள்ளது. இதில் புதிதாக வந்துள்ள விடயம் செம்மணி விவகாரம். அண்மையில் ஆணையாளரே நேரடியாகப் பார்த்துச் சென்றுள்ளார். செம்மணியில் இனப்படுகொலைக்கான ஆதாரம் வெளிவருகின்றது என நாம் ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியுள்ளோம். இதன் பிரதி ஐ.நா. ஆணையாளருக்கும் உறுப்பு நாடுகளிற்கும் வழங்கியுள்ளோம்.

ஐ.நா. தீர்மானம் வருகின்ற போது உறுப்பு நாடுகளுக்குக் கடிதம் எழுத வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்க முன்னணியினர் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அதில் சில சிவில் அமைப்புக்களும் இணைந்திருந்தார்கள். நாம் அதில் பங்குகொள்ளவில்லை. அதற்கான காரணத்தை எமது கட்சியின் தலைவர் ஊடகங்களிற்கு கூறியுள்ளார்.

அவர்களின் கூட்டத்தில் அவர்கள் ஒரு கடிதத்தைத் தயாரித்துள்ளனர். தயாரித்த கடிதத்தை தலைவருக்கும் எனக்கும் அனுப்பி வைத்துள்ளனர். அது தொடர்பில் கூடி ஒரு தீர்மானம் எடுப்போம் எனக் கூறியதன் பின்பும், எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அனுப்பி அவர்களின் கையொப்பத்தையும் கேட்டுள்ளனர்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே நாம் கட்சித் தீர்மானமாகவே செயற்படுவோம், தனியாகக் கையொப்பம் வைக்க மாட்டோம் என அவர்களுக்கு அறிவித்துள்ளனர். இது தொடர்பிலும் (இன்று) பேசினோம்.

எமது நிலைப்பாடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் என்ன செய்யப்பட வேண்டும், தமிழ் மக்கள் சார்பாக எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் எமது தீர்மானத்தை சொல்லியிருக்கின்றோம். உயர்ஸ்தானிகர் வந்தபோதுகூட 2021 இல் நானும் கஜேந்திரகுமாரும் இறுதி செய்த ஓர் ஆவணம் இரா.சம்பந்தன் உள்ளிட்டோர் கையொப்பமிட்டு கையளித்தோம். அது எமது நிலைப்பாடு. அதில் மாற்றம் இல்லை.

இந்தத் தருணத்தில் எதைச் சொல்ல வேண்டும், அதை எப்படிச் சொல்ல வேண்டும் என நாம் ஒரு கருத்துப் பரிமாற்றம் செய்திருக்கின்றோம். அவர்கள் தயாரித்து எமது மேசையில் வைத்த ஆவணத்தில் நாம் கையொப்பம் இடவில்லை. நாம் அதைவிட தீர்க்கமாகப் பல விடயங்களை ஆராய்ந்து சொல்ல வேண்டிய முறையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சி என்ற வகையில் உகந்த தருணத்தில் அதை வெளிப்படுத்துவோம். அத்தகைய தீர்மானம் ஒன்றை இன்று எடுத்துள்ளோம்." – என்றார்.

## தென்னிலங்கை...

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டம், ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிங்கம பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

காணித் தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் துப்பாக்கியுடன் ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஹுங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விசா முறைகேடுகள்

பொருளாதார நிலையில் மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் நாட்டைத் தூக்கி நிறுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு மோசமாக முகம் கொடுத்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசும், அதைத் தொடர்ந்து தற்போதைய அநுரகுமார திஸநாயக்காவின் அரசும் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்வதற்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டில் அதீத கவனத்தை செலுத்தத் தீர்மானித்து செயற்படத் தொடங்கின.

ஒருவகையில் அந்தத் துறையில் ஒரு பெரிய பாய்ச்சல் ஏற்பட்டிருக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடாந்தம் 30 லட்சமாக உயர்த்துவதன் மூலம் இந்தத் துறையின் வாயிலாக வருடத்திற்கு 500 கோடி டொலர் அந்நிய செலாவணியை ஈட்டும் திட்டத்தில் அரசு மும்முரமாக இருக்கின்றது.

இந்த இலக்கை நோக்கி சுற்றுலாத்துறை மிக வேகமாக முன்னேறி வருகின்றது. அதற்கு ஏற்ப அத்துறையை ஊக்குவிக்கும் விதத்தில் வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசும் தீவிரமாக இருக்கின்றது.

ஆனாலும், அந்த முன்நகர்விலும் சில பின்னடைவுகள் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக நாட்டுக்குள் வருவதற்கான விசா கெடுபிடிகளை அரசு இயன்றளவு தளர்த்தி, சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் தீவிரம் காட்டுகின்றது.

ஏற்கனவே பல நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்கியுள்ள இலங்கை அரசாங்கம், அதை மேலும் விரிவு படுத்தி சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்காக 40 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு இலவச விசா நுழைவை வழங்கும் விதத்தில் திட்டத்தை விஸ்தரிக்க முடிவு செய்து இருக்கிறது.

ஆனால் சில நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இந்த இலவச விசா வசதியை துஷ்பிரயோகம் செய்து, இலங்கைக்குள் நெருக்கடிகளை உருவாக்கும் விதத்தில் செயல்படுகின்றனர் என்று இப்போது குறை கூறப்படுகிறது.

இஸ்ரேல், இந்தியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்ந்த பலர் சுற்றுலாப் பயணிகளாக நாட்டுக்குள் வந்து இங்கு வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் சட்டத்தை அப்பட்டமாக மீறுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தத்தம் நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் தாங்களே இலங்கைக்குள் விருந்தினர் விடுதிகளை நடத்துதல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வாடகை வாகனங்களைச் செலுத்துதல், சுற்றுலா வழிகாட்டி சேவைகளை நடத்துதல் என்று இலங்கையின் சுற்றுலாத் துறையில் அவர்கள் ஒரு வர்த்தகத்தை நாட்டுக்குள் நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் அருகம் விரிகுடாவில் அதிக எண்ணிக்கையில் இஸ்ரேலியர்கள் வருகின்றமையைப் பயன்படுத்தி இஸ்ரேலிய நாட்டினர் அங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர், வர்த்தக மையங்களை நடத்துகின்றனர் என்று கூறப்படுகின்றது. இஸ்ரேலிய குடிமக்களின் எபிரேய மொழியில் எழுதப்பட்ட அறிவிப்பு பலகைகள் இந்த நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ளன. யூத சமூக மையமான சபாத் ஹவுஸூம் அங்கு உள்ளது.

இதே போல சில நாடுகளில் இருந்து வருபவர்கள் இங்கு மசாஜ் கிளினிக்குகள் என்று சொல்லப்படும் 'ஸ்பா'க்களில் பணியாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல இந்தியாவிலிருந்து சுற்றுலாப் பயணிகள் போல சுற்றுலா விசாவில் வந்து இலங்கையில் விவசாயம், ஹோட்டேல் துறை, கட்டுமானம் போன்ற துறைகளிலும் தகவல் தொழில்நுட்ப மையங்களிலும் தங்கியபடி பணி புரிகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல சமயங்களில் விசா அனுமதிக் காலம் முடிந்த பின்னரும் அவர்கள் நாட்டுக்குள் தங்கி இருக்கின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக சட்ட விதிகளை அரசு தளர்த்த, அதனைப் பயன்படுத்தி சட்ட முறையற்ற செயல்கள் தீவிரமடைகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை, உரிய முறைகளில் அரசு எடுக்க வேண்டும்.



# பஸ் விபத்தில் 42 பேர் காயம்

கேகாலை -அவிசாவளை வீதியில் பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

தெஹியோவிட்ட பகுதியில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.



# 583 கிலோ பீடி இலைகளுடன் கைப்பற்றப்பட்ட டிங்கிப் படகு

(எம்.எச்.எம். சியாஜ்)

இலங்கைக் கடற்படையினர் நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 583 கிலோகிராமை விட அதிகமான பீடி இலைகளுடன் ஒரு டிங்கிப் படகு கைப்பற்றப்பட்டது.

இலங்கைக் கடற்படையினரால் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விசேட நடவடிக்கைகளினால் பீடி இலைகளை நாட்டுக்குள் கொண்டு வர முடியாமல், கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகிக்கின்றனர். கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கிப் படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# நெடுங்கேணியில் காட்டுப் பகுதியை துப்பரவு செய்த இருவர் சிக்கினார்கள்

(கி.வசந்தன்)

வவுனியா, நெடுங்கேணி, தண்டுவான் பகுதியில் சட்டவிரோதமாகக் காட்டுப் பகுதியைத் துப்புரவு செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் மாங்குளம் வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 23 மற்றும் 40 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






முரசின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

# யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிக்கு உத்தியோகபூர்வ சீருடை வழங்கிவைப்பு






“முரசு“ டிஜிட்டல் நாளிதழின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கனடா Tamil One Tv மற்றும் A One Media Network வின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மாவட்ட கால் பந்தாட்ட அணிக்கு உத்தியோகபூர்வ சீருடை வழங்கி வைக்கப்பட்டது.
















# சமஷ்டியை வலியுறுத்தி வெருகலில் கவனவீர்ப்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி திருகோணமலை – வெருகல், பூநகர் பகுதியில் இன்று சனிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனை வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது சுலோகங்களை ஏந்தி அமைதியான முறையில் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், மதச் சுதந்திர மீறல்கள், ஏனைய வன்முறைகள் இடம்பெறாமல் இருப்பதாக இருந்தால் வடக்கு – கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.






# மயூரபதி அம்மன் பஞ்சரத பவனி

கொழும்பு ஸ்ரீமயூரபதி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான 38 ஆவது ஆடிப்பூரம் மஹோற்சவ பஞ்சரதபவனி இன்று காலை ஆலய பிரதம குரு தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. பஞ்சரதங்களும் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு வீதியுலா செல்கின்றமையையும், தங்கள் நேர்த்திகடனை நிறைவேற்றுமுகமாக பக்தர்கள் செடில்குத்தி தூக்குக் காவடி எடுத்து, அங்கப்பிரதட்சனைசெய்து, அலகுகுத்தியுயம் தங்கள் நேத்திக்கடனை அனுஷ்டிக்கின்றமையையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்)


















# மயூரபதி அம்மன் பஞ்சரத பவனி
























# மாங்குளம் முதலீட்டு வலயத்தை விவசாய வலயமாக யுனிடோவின் உதவியில் கட்டியெழுப்ப நடவடிக்கை

மாங்குளம் முதலீட்டு வலயத்தை விவசாய முதலீட்டு வலயமாக ஐ.நாவின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் (யுனிடோ) உதவியுடன் கட்டியெழுப்புவது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்ற ஆளுநர் தனது உரையில், வடக்கு மாகாணத்தை – வன்னிப் பிராந்தியத்தை ஒரு துடிப்பான உற்பத்தி மற்றும் பெறுமதிசேர் மையமாக புத்து யிர்பெறச் செய்வதே எங்களுடைய நோக்கம்.

வடக்கில் இலங்கை முதலீட்டு சபையால் 3 முதலீட்டு வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதில் மாங்குளம் முதலீட்டு வலயத்தை விவசாய முதலீட்டு வலயமாக கட்டியெழுப்புவதன் ஊடாக நிலையான வளர்ச்சி, வேலை வாய்ப்பு மற்றும் பிராந்திய செழிப்பையும் ஏற்படுத்த முடியும்.

இந்த முதலீட்டு வலயம் கணிசமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும். விவசாயம் மற்றும் கடற்றொழில் சார்ந்த பெறுமதிசேர் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலமும், சுற்றுச்சூழல் நட்பு முதலீட்டை ஈர்ப்பதன் மூலமும், இந்த முதலீட்டு வலயம் தேசிய பொருளாதாரத்துக்கு வடக்கின் பங்களிப்பை உயர்த்தும்.

முதல் கட்டத்தைத் தொடங்கவும், அமைச்சகங்களுக்கு இடையில் ஒருங்கிணைக்கவும், விவசாய உற்பத்திகளை பதப்படுத்துதல் மற்றும் பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் உதவிகளை மேற்கொள்ளுமாறு பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொருத்தமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மாங்குளத்தை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான ஆதரவை இலங்கை முதலீட்டுச் சபையிடம் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

தொழில்துறை திறன் மேம்பாடு, உணவு பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் நிலையான உற்பத்தியில் யுனிடோவின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது, அதேபோல் நிறுவனங்களை உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுடன் இணைப்பதில் ஆதரவும் முக்கியமானது.

இந்தத் திட்டம் வெறும் ஒரு தொழில்துறை முதலீட்டு வலயம் அல்ல – இது வடக்குக்கான மீள்தன்மை, நம்பிக்கை மற்றும் புதுப்பித்தலின் சின்னமாகும். ஒன்றாக, இந்தத் தொலை நோக்கை நடைமுறையில் கொண்டுவருவதற்கு ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் விவசாயம், கடற்றொழில், கால்நடை உற்பத்திப் பொருள்கள் மூலப்பொருட்களாகவே வடக்கிலிருந்து கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் வருமான இழப்பு ஏற்படுகின்றது. அத்துடன் சில காலங்களில் அதிகளவு உற்பத்திகளால் அவற்றின் விலையும் வீழ்ச்சியடைகின்றன. எனவே விலைத்தளம்பல் இல்லாமல், விவசாயிகள், மீனவர்கள், கால்நடை உற்பத்தியாளர்களை தொடர்ந்தும் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு மாங்குளம் முதலீட்டு வலயத்தை பெறுமதிசேர் உற்பத்தி பொருள்களுக்கான வலயமாக உருவாக்குவது பொருத்தமாக அமையும.– என்றார்.

ஆளுநரைத் தொடர்ந்து உரையாற்றிய பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர், வடக்கு மாகாணத்தில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள தென்னை முக்கோண வலயம் தொடர்பாகவும், பனை தொழிற்துறை தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தார். அதனை வளப்படுத்தி உற்பத்திகளை அதிகரிப்பது மாங்குளம் முதலீட்டு வலயத்துக்கு உதவியாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் யுனிடோ நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி, மாங்குளம் முதலீட்டு வலயத்தை எப்படி மேம்படுத்துவது என்பது தொடர்பான தமது விளக்கங்களையும், ஏனைய நாடுகளில் யுனிடோ எவ்வாறு இவ்வாறான விடயங்களை செயற்படுத்தியுள்ளது என்பது தொடர்பாகவும் தெளிவுபடுததினார்.

இதேவேளை, மாங்குளத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்துத் துறைசார் தரப்புக்களையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. தொடர் கலந்துரையாடல்கள் ஊடாக விரைவாக இதனை நிறைவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், கௌரவ பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சி.சிறீபவானந்தராஜா, பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலர் பிரபாத் சந்திரகீர்த்தி, வடக்கு மாகாண பிரதம செயலர் திருமதி தனுஜா முருகேசன் உள்ளிட்டபல்வேறுதிணைக்களங்களின் பிரதிநிதிகளும் ஐ.நாவின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் (யுனிடோ) பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.





# பளை இந்திராபுரத்தில் நிரந்தர ரயில் கடவை!

பளை இந்திராபுரம் கிராம மக்களின் நீண்டகால கோரிக்கையான நிரந்தர ரயில் கடமை அமைத்து தருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இன்று (02) நேரடியாக வந்து பார்வையிட்ட பின்னர் கடவையை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்களுக்கு தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நேரில் வந்து பார்வையிட்டு வாக்குறுதியளித்தார்.










# சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் ஏற்பாட்டில், பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ் உதுமாலெப்பை மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.டீ.எம். ராபீ, சாய்ந்தமருது பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதேச செயலக உத்தியோத்தர்கள், முப்படையினர், திணைக்களங்களின் உயரதிகாரிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியோக செயலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





# ஒலுவில் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் திடீரென்று தீ பரவல்!

## தீயணைப்புப் பிரிவின் உதவியோடு நிலமை கட்டுப்பாட்டில்

(எஸ்.அஷ்ரப்கான்)

ஒலுவில் அஷ்ரப் நகரில் அமைந்துள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நேற்று முன்தினம் (31) அதிகாலை திடீரென்று தீ பரவியது.

அக்கரைப்பற்று மாநகர சபை தீயணைப்பு பிரிவின் உதவியோடு தீ கட்டுப்படுத்தப்பட்டது.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ். எம்.உவைஸ் மற்றும் பிரதித் தவிசாளர் பாறுக் நஜித் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவப் பொறுப்பாளர் எம்.இர்பான், வேலைத்தள மேற்பார்வைளர் எம்.ஏ. மனாப் உட்பட ஏனைய ஊழியர்களும், பாலமுனை இளைஞர்களும் தங்களின் பங்களிப்பை செய்தனர்.

நள்ளிரவிலும் மக்களுக்காக சேவையாற்றும் மாநகர சபை தீயணைப்பு ஊழியர்களுக்கும், அதன் முதல்வர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுக்கும் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோர் நன்றிகளை தெரிவித்தனர்.



# சம்மாந்துறை பஸ் தரிப்பிட புனரமைப்புப் பணிகள்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை ஜமாலியா பள்ளிவாசல் முன்பாக உள்ள, பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பஸ் தரிப்பிடம், மக்களின் நீண்ட நாள் வேண்டுகோளுக்கு அமைய புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்தப் பணிகள், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிரின் நேரடி கண்காணிப்பிலும், கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலும் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான அமீர் அப்னான், எம்.ஆர். ஆஷிக் அஹமட், எஸ்.எல்.எம். பஹ்மி மற்றும் சமூக ஆர்வலர் சகோதரர் பர்ஷாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களுக்கான சின்னமுத்து, றூபெல்லா தடுப்புமருந்து ஏற்றல்

சின்னமுத்து நோய் பரவுதலைத் தடுப்பதற்காக முதற்கட்டமாக பாதுகாப்புபடை உத்தியோகத்தர்களுக்கான சின்னமுத்து, றூபெல்லா தடுப்பு மருந்தேற்றல் நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிறந்து ஒன்பதாம் மாதம் மற்றும் மூன்று வயதுகளில் ஏற்றப்படும் இந்தத் தடுப்பூசிகளில் இரண்டையும் முழுமையாகப் பெற்றிருக்காத 1994 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து 2003 ஆம் ஆணடு இறுதிவரை பிறந்தவர்களுக்கே இத்தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகிறது.

தொடர்ந்து சுகாதார ஊழியர்களுக்கும், ஏனைய நிறுவன ஊழியர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்குமாக கட்டங் கட்டமாக இந்தத் தடுப்பு மருந்தேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பு மருந்தேற்றப்படாத மக்களிடையே சின்னமுத்து பரவல் அதிகளவில் ஏற்பட ஆரம்பித்தமை இனங்கண்டபின்பே இந்தத் தடுப்பு மருந்தேற்றல் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நேயின் அறிகுறிகளாக பெரியவர்களுக்குக் காய்ச்சல், முகத்தில் ஆரம்பித்து உடலின் ஏனைய பகுதிகளுக்கு பரவும் சிவந்த புள்ளிகள், மூக்குவடிதல் என சாதாரணமானதாகக் காணப்படும்.

கற்பிணித் தாய்மார்களுக்கு இந்த நோய் ஏற்பட்டால் கருவிலுள்ள குழந்தைக்கு இதயப் பாதிப்பு, செவிட்டுத் தன்மை, குருட்டுத்தன்மை, மூளைப் பாதிப்பு முள்ளந்தண்டுபாதிப்பு என தீவிர விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம்.

எனவே சமூகத்தில் இந்த தடுப்பு மருந்தேற்றலின் வீதம் அதிகரிக்கும் போது நோய்பரவல் குறைந்து பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வவுனியா வடக்கு பிரதேச மக்களது பிரச்சினைகளை ஆராய்ந்தார் ஆளுநர்

## தீர்வுகள் தொடர்பிலும் நடவடிக்கை

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களை நிரந்தரமாக அங்கு குடியமர்த்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இதற்கான களப்பயணம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை (01) மேற்கொண்டுள்ளார்.

முதலில் காஞ்சிரமோட்டைக்குச் சென்ற ஆளுநர் தலைமையிலான குழுவினர் அங்கு தற்போது வசிக்கும் 23 குடும்பங்களையும் சந்தித்தனர்.

இந்தக் களப் பயணத்தில் அங்குள்ள மக்கள் தெரிவிக்கையில்,

யானைவேலி அமைத்துத் தாரங்கள். கிணறுகளை புனரமைக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் ஊடாக அமைக்கப்பட்ட வீடுகள் அரைகுறையாக உள்ளன. அவற்றை முழுமைப்படுத்தித் தாருங்கள்.அத்துடன் எமக்கான காணி ஆவணங்கள் இல்லை. மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி சீரில்லை. மீளக் குடியமர்ந்த பின்னர் வனவளத் திணைக்களத்தால் குடிமனைக்கு அண்மையாக எல்லைக் கல்லுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.- என்று தெரிவித்தனர்.

இதன்போது மருதோடை – காட்டுப் பூவரசன்குளம் வீதியிலிருந்து நாவலர் பண்ணை வரையிலான 5.5 கிலோ மீற்றர் நீளமான வீதியை துரிதமாகப் புனரமைப்பதற்கும், அதன் ஊடாக போக்குவரத்துச் சேவையை சீராக்குவதற்கும் ஆளுநர் அறிவுறுத்தினார். அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளிக்கு ஆசிரியரை அடையாளம்கண்டு விரைவில் நியமிக்கவும், அந்தப் பகுதி மக்களுக்கான மேட்டுக்காணியை விரைந்து வழங்கவும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து வெடிவைத்த கல்லு கிராம மக்களை ஆளுநர் சந்தித்தார்.

யானைவேலி அமைக்கப்படாமல் தம்மால் மீளக்குடியமர முடியாது என மக்கள் இதன்போது தெரிவித்தனர். யானைகளால் உயிரிழப்புக்களைக் கூட தாம் சந்தித்துள்ளனர் என்றும் பயிரழிவுகள் கூட ஏற்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டனர். மாடுகள் உள்பட தமது பொருள்களும் களவாடப்படுகின்றன என்றும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் வனவளத் திணைக்களம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்றும் தமது காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டனர்.

மிக அடர்ந்த காடுகள் ஏக்கர் கணக்கில் அருகிலுள்ள பிரதேசங்களில் பெரும்பான்மையின மக்களால் அழிக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத வனவளத் திணைக்கள அதிகாரிகள், தாம் சிறிய விறகுத் தடியை வெட்டினால் கூட வழக்குத் தொடுக்கின்றனர் என்றும் ஆளுநரிடம் முறையிட்டனர். வனவளத்

தொடர்ச்சி▼



# வவுனியா வடக்கு பிரதேச மக்களது பிரச்சினைகளை ஆராய்ந்தார் ஆளுநர்



**தொடர்ச்சி▲**

திணைக்களத்தினரால் தற்போதும் இனப்பாகுபாடு காட்டப்படுவதாகவும் குற்றம் சுமத்தினர்.

திரிவைத்தகுளத்தில், 1983 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொண்ட நிலையில் இடம்பெயர்ந்து சென்று மீள்குடியமர்ந்த பின்னர், 2019 ஆம் ஆண்டு காணிகளைத் துப்புரவு செய்தபோது வனவளத் திணைக்களத்தால் தடுக்கப்பட்டது என்றும் தற்போது அந்தக் காணிகள் வனவளத் திணைக்களத்திடமிருந்து மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன எனவும் மக்கள் தெரிவித்தனர். தமது காணி தமக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரினர்.

மக்களின் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் எனத் தெரிவித்த ஆளுநர், நீங்களும் மீள்குடியமர்வுக்கான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். உங்களின் மீள்குடியமர்வு முயற்சியில்தான் நாமும் உற்சாகமாக உங்களுக்கான உதவிகளைச் செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் மருதோடைப்பகுதியைப் பார்வையிட்ட ஆளுநர், கடந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்துடன் மூடப்பட்ட ஊஞ்சல்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து பெரிய கோரமோட்டைக் குளத்தையும் பார்வையிட்டார். குளத்தின் கீழான பயிர்ச்செய்கை கைவிடப்பட்டுள்ளமையையும் ஆளுநர் அவதானித்தார். இது தொடர்பில் கமநலசேவைத் திணைக்களத்தினருக்கு, குளத்தை புனரமைப்பதற்கான அறிவுறுத்தலையும் வழங்கினார்.

நெடுங்கேணி மருதோடை அ.த.க. பாடசாலைக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையில் நிதி வழங்கப்பட்டு அங்கு கட்டடம் அமைக்கப்படவுள்ள நிலையில், பாடசாலையையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மக்களையும் ஆளுநர் சந்தித்தார். இதன்போது, கோவில்புளியங்குளம் மக்களால், யானைவேலி அமைத்தல், வெடிவைத்த கல்லு வரையிலான வீதிப் புனரமைப்பு, வீதி விளக்குகள் பொருத்துதல், மருதங்குளம் புனரமைப்பு ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. மாமடுக் குளம் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்ற வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது. அத்துடன், சம்பளம் குளத்திலிருந்து பனைநின்றான் செல்லும் வீதியை புனரமைத்து தர வேண்டும் எனவும் மக்கள் கேட்டுக் கொண்டனர்.

வனவளத் திணைக்களத்தினர் பாரபட்சமாக நடந்துகொள்வது தொடர்பாக மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் வனவளத்திணைக்கள பிரதிநிதிகளிடம் ஆளுநர் தெரியப்படுத்தினார். அவ்வாறு செயற்படுவது தவறு எனவும் சுட்டிக்காட்டினார். மேலும், வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணிகள் விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் காணிகளை அடையாளம் காண்பதற்கு பிரதேச செயலரையும் உள்ளடக்கிய குழுவை நியமித்து செயற்படுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

கால்நடை வைத்தியர்கள் தொடர்பாக மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, வைத்தியருக்குரிய வாகன வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் பதிலளித்தார். அதேபோல் காணிக் கச்சேரிகள் விரைவில் நடத்தப்பட்டு காணி ஆவணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆளுநரின் இந்தக் களப்பயணத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரும் இணைந்திருந்தனர்.









# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும், உதவித் திட்டமும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக ஆன்மீக அருளுரையாக "ஞானவேல்" என்ற தலைப்பில் சித்த மருத்துவத்துறை மருந்தாளர் த.தவநேசன் நிகழ்த்தினார்கள். உதவித் திட்டமாக, அளவெட்டி அருணா சலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மாணவர்களுக்குக் கழுத்துப் பட்டி வழங்குவதற்கு 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

நேற்று (01) வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.





# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை மோட்டார் சைக்கிளுடன் இருவர் கைது!

(பா.சதீசன்)

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்புடன் வயோதிபர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இன்று (02) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக இன்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து உப பொலிஸ் பரிசோதகர் சேனக்க, பொலிஸ் சார்ஜன்களான (69515) திலகரத்ன , (6617) ஜானக்க, பொலிஸ் கொஸ்தாபிள்களான (91451) குமார, (99801) புத்திக்க ஆகிய பொலிஸ் குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அதன்போது விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் உள்ள கசிப்பு விற்பனை நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டது. அங்கு விற்பனைக்காக போத்தலில் வைக்கப்பட்டிருந்த 30 லீற்றர் கசிப்பும் விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. அந்தப் பகுதியில் எதுவித ஆவணங்களும் இன்றி இருந்த மற்றொரு மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் விசுவமடு ரெட்பானா பகுதியை சேர்ந்த 51, 56 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த கிராமத்தில் இளைஞர்கள் , விளையாட்டு கழகங்கள், கிராம மக்கள் இணைந்து சட்டவிரோத சகிப்பு உற்பத்தியை ஒழிப்பதற்கு ஆர்வமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# ரஷ்ய உறவு பாதிக்காது; இந்தியா திட்டவட்டம்

ரஷ்யாவுடனான உறவு பாதிக்கப் படாது என இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தால் இந்தியாவுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து டில்லியில் மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் நேற்று கூறியபோது, "இந்தியா – ரஷ்யா உறவு வலுவானது. மூன்றாம் நாட்டின் தலையிட்டால் இந்த உறவு பாதிக்கப்படாது. இதே போல இந்தியா – அமெரிக்கா உறவும் வலுவடைந்து வருகிறது. நாட்டின் நலனுக்கு தேவையான பாதுகாப்பு கொள்கையை கடைபிடித்து வருகிறோம்." என்றார்.

அமெரிக்கர்களின் வீட்டு செலவு அதிகரிக்கும் இதற்கிடையே, அமெரிக்காவின் புதிய வரிவிதிப்பு நடவடிக்கையால் ஏற்படும் பணவீக்கம் காரணமாக அமெரிக்காவில் சராசரி குடும்பத்தினரின் வீட்டு செலவு ஆண்டுக்கு 2,400 டொலர்வரை அதிகரிக்கும். அமெரிக்க பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று எஸ்.பி.ஐ. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக அமெரிக்காவில் மின்னணு பொருள்கள், ஓட்டோமொபைல் உதிரி பாகங்கள், நுகர்வோர் பொருள்கள் ஆகியவற்றின் விலை உயரும் என்று கூறப்படுகிறது.

# செப்டம்பர் 9 ஆம் திகதி நடைபெறும் குடியரசு துணைத் தலைவர் தேர்தல்



குடியரசு துணைத் தலைவர் தேர்தல் செப்டம்பர் 9 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாட்டின் 14 ஆவது குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜெகதீப் தன்கரின் பதவிக் காலம் 2027 ஓகஸ்ட் வரை இருந்த நிலையில், உடல்நிலையை காரணம் காட்டி, அவர் தனது பதவியை கடந்த மாதம் 21 ஆம் திகதி இராஜினாமா செய்தார்.

முழுமையான 5 ஆண்டு பதவி காலத்துக்குள், அந்த பதவி வெற்றிடமானால் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதால், அதற்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் கடந்த வாரம் தொடங்கியது. இதை தொடர்ந்து, மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்களை உள்ளடக்கிய வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணையம் நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. அதன்படி, தேர்தல் நடத்தை விதிமுறைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடங்குகின்றன. அன்றே வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது. மனுக்களை தாக்கல் செய்ய 21 ஆம் திகதி கடைசி நாள். மனுக்கள் பரிசீலனை 22 ஆம் திகதி நடைபெறும். மனுக்களை வாபஸ் பெறும் அவகாசம் 25 ஆம் திகதி முடிவடைகிறது.

போட்டி இருக்கும்பட்சத்தில், செப்டம்பர் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அறையில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடத்தப்படும். வாக்குப்பதிவு முடிந்ததும் உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டு, சில மணி நேரத்துக்குள் முடிவு வெளியாகும்.

ஆளும் கட்சி சார்பில் பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவர் களமிறக்கப்படுவார் என்று தெரிகிறது. இண்டியா கூட்டணி சார்பிலும் வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று கூறப்படுகிறது. தற்போது இரு அவைகளையும் சேர்த்து எம்.பி.க்களின் எண்ணிக்கை 782 ஆக உள்ளது. இவர்கள் அனைவரும் வாக்களிக்கும் நிலையில், குறைந்தபட்சம் 391 வாக்குகளை பெறும் வேட்பாளர் வெற்றி பெறுவார்.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு (என்.டி.ஏ), மக்களவையில் 293 பேரின் ஆதரவும், மாநிலங்களவையில் 129 பேரின் ஆதரவும் உள்ளது. நியமன எம்.பி.க்களும் ஆதரவு அளித்தால், என்டிஏவுக்கு மொத்தம் 422 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும்.எனவே, பா.ஜ.க. வேட்பாளர் வெற்றி பெறுவது எளிதாக இருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு துணைத் தலைவர் 5 ஆண்டு காலம் இந்த பதவியில் இருப்பார்.




# ரஷ்யா அருகே அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நிலைநிறுத்துவதற்கு டொனால்ட் ட்ரம்ப் உத்தரவு

ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி டிமித்ரி மெத்வெதேவ் வெளியிட்ட கடுமையான எச்சரிக்கைக்கு பதிலாக ரஷ்யா அருகே இரண்டு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நிலைநிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பை ட்ரம்ப் தனது உத்தியோகபூர்வ சமூக ஊடகதளத்தில் வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், “ரஷ்ய பாதுகாப்பு குழுவின் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மெத்வெதேவ் வெளியிட்ட மிக கடுமையான மற்றும் தூண்டுதலாகக் காணப்படும் கருத்துகளுக்கு பதிலாக, இரண்டு அணு உபமெருகணைகளை ‘தக்க பகுதிகளில்’ நிலைநாட்ட உத்தரவிட்டுள்ளேன்.

இவை வெறும் வார்த்தைகளாக இல்லாமல், அதற்கு அப்பாற்பட்ட எதையாவது குறிக்குமானால், முன்னேற்பாடாகவே இது,” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“வார்த்தைகள் மிக முக்கியமானவை் அவை எதிர்பாராத விளைவுகளுக்கு வழிவகுக்கும். இந்த முறை அவ்வாறாக இருக்கக்கூடாது” என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்குமுன், உக்ரைன் மீது நடக்கும் போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யாவுக்கு 10 நாள்கள் கால அவகாசம் அளிக்கப்படும் என்றும் இல்லையெனில் ரஷ்யா மற்றும் அதன் கூட்டாளிகள் கடுமையான வரி சுமைகளை சந்திக்க நேரிடும் எனவும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

இந்த எச்சரிக்கையை மெத்வெதேவ் கண்டனம் செய்யும் வகையில், ரஷ்யா இஸ்ரேல் அல்லது ஈரான் அல்ல. ஒவ்வொரு புதிய உத்தரவும் நேரடியான மோதலை ஏற்படுத்தும் என குறிப்பிட்டார்.

மேலும், சோவியத் யுகத்தில் இயங்கிய ‘டெட் ஹேண்ட்’ எனப்படும் தானாகவே அணு தாக்குதல் நிகழ்த்தும் அமைப்பும் இன்றும் செயலில் இருப்பதாகவும் அவர் நினைவூட்டினார்.

இவ்வாறு இரு நாடுகளின் தலைவர்கள் இடையே ஏற்பட்ட வார்த்தை மோதல், அமெரிக்கா-ரஷ்யா இடையேயான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

# பிரித்தானியா குடியேற்றச் சட்டங்களில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்தது



பிரித்தானியா அந்நாட்டின் குடியேற்றச் சட்டங்களில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.

குடியேறுபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் விதமான குறித்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரித்தானியா அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், பிரித்தானியாவில் குடியுரிமை பெற தேவையான கால அவகாசம் 5 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக இரட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பிரித்தானியாவில் குடியேற ஆங்கில மொழித் தகமை மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மாற்றங்கள் குடியுரிமை பெற விரும்பும் வெளிநாட்டு குடிமக்களுக்கு சவாலாக மாறலாம் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மிகவும் கடுமையான நடவடிக்கையாக பார்க்கப்படுவதாகவும்,மனித உரிமை பாதுகாப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சட்டங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா தொடர் தாக்குதல்

உக்ரைனின் தலைநகர் கீவ்-வின் பல பகுதிகளில் ரஷ்யா பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

309 ஆளில்லா விமானத்தாக்குதல்கள், மற்றும் 8 ஏவுகணை தாக்குதல்களை ரஷ்யா நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்களில், 16 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 155 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 12 சிறுவர்கள் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.









பக்கங்கள் - 2


# கனடா முரசு

சனிக்கிழமை 02/08/2025

## கனடாவின் ஒன்றாரியோ மக்கள் மருத்துவர்களுக்காக காத்திருப்பு

ஒன்றாறியோ மாகாணத்தில் மருத்துவ நிபுணர்களை சந்திக்க காத்திருக்கும் நேரம் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என தெரிவிக் கப்படுகின்றது.

C2




# அமெரிக்காவை புறக்கணிக்க கனடா மக்கள் பலர் தீர்மானம்

கனேடிய மக்கள் ஏற்கனவே ட்ரம்பின் வரி விதிப்பு மற்றும் கன டாவை அமெரிக்காவுடன் இணைப்ப தாக மிரட்டல் ஆகிய விடயங்களால் கடும் கோபத்திலிருக்கிறார்கள்.

இந்நிலையில், மீண்டும் கனே டிய பொருட்கள் மீதான வரிகளை உயர்த்தியுள்ளார் ட்ரம்ப். அதாவது, கனடாவிலிருந்து அமெரிக்கா இறக் குமதி செய்யும் பொருட்கள் மீது 35 சதவிகித வரிகள் விதிக்கப்பட உள்ளன.

C2

# கனடாவின் வேலைவாய்ப்பு எண்ணிக்கை மே மாதத்தில் 20,400 ஆக குறைந்துள்ளது







கடந்த மே மாதத்தில் கனடாவின் வேலைவாய்ப்பு எண்ணிக்கை 20,400 ஆக குறைந்துள்ளது.

இது கடந்த 2017 ஒக்டோபருக்குப் பின்னர் நாட்டில் பதிவான மிகக் குறைந்த வேலைவாய்ப்பு எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் மாதத்தில் ஏற்கனவே 3.4 வீதம் வீழ்ச்சி பதிவாகியிருந்தது. கனடாவின் புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த வீழ்ச்சியை உறுதிப்படுத்துகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகப் போர்கள் காரணமாக கனடிய நிறுவனங்கள் எதிர்கால நிச்சயமற்ற தன்மையினால் பணியமர்த்தலை குறைத்து, நிலையான செயல்பாடுகளை மட்டுமே கவனம் செலுத்துகின்றன.

நிச்சயமற்ற சூழலில் நிறுவனங்கள் புதிய பணியாளர்களை சேர்ப்பதைத் தவிர்க்கின்றன தெரிவிக்கப்படுகின்றது.

2025 தொடக்கத்தில் 38 வீத ஊழியர்கள் வேறும் வேலைகளுக்கு செல்ல திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அது 26 வீதமாக குறைந்துள்ளது. இது புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் வேகத்தையும் பாதித்துள்ளது.

# சிறுவர் விளையாட்டுப் பொருள் குறித்து கனடாவில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

கனடாவிலும் அமெரிக்காவிலும் விற்பனை செய்யப்பட்ட கிட்கிராஃப்ட் ஃபார்ம் டு டேபிள் மாடல் (மொடல் எண் 53411) என்ற குழந்தைகளுக்கான விளையாட்டு சமையலறை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஓரிகனில் 23 மாத குழந்தையொன்று உயிரிழந்ததை அடுத்து இந்த விளையாட்டுப் பொருள் மீளப் பெற்றுக்கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் ஆடை, சமையலறையின் பின்புறத்தில் உள்ள திறப்பு வழியாக ஏறி விளையாடும்போது, உலோக கொக்கியில் சிக்கியதால், மூச்சுத் திணறல் மற்றும் ஒக்ஸிஜன் பற்றாக்குறையால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம், சமையலறை சுவரில் பாதுகாப்பாக பொருத் தப்படாததால், சுவருக்கும் சமையலறைக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டு, குழந்தை ஏறி ஆடை கொக்கியில் சிக்கியதால் நிகழ்ந்தது.

கனடாவில் சுமார் 5,800 விளையாட்டு உபகரணங்க ளும், அமெரிக்காவில் சுமார் 192,000 உபகரணங்களும் 2018 முதல் 2023 வரை விற்பனையாகியுள்ளன.

இந்த சமையலறைகள் முதலில் கிட்கிராஃப்ட், இன்க். நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு, மே 2024 வரை விநியோகிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இந்த விளையாட்டு உபகரணம் காரணமாக கனடாவில் எந்த காயங்களும் பதிவாகவில்லை எனவும் மேலும் அமெரிக் காவில் இந்த ஒரு சம்பவம் மட்டுமே பதிவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



இந்த விளையாட்டு உபகரணங்கள் பயன்படுத்துவதனை நிறுத்துமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை தொடர்பில் கனடியருக்கு தண்டனை

கனடாவின் வின்னிபெக் நகரைச் சேர்ந்த ராபர்ட் ஆலன் கிரெட்டர், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நியூ ஜெர்சியில் ஒரு பெண்ணை கழுத்தை நெரித்து கொலை செய்ததாக ஒப்புக்கொண்டதை அடுத்து, 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ராபர்ட் ஆலன் கிரெட்டர், 1997ஆம் ஆண்டு தாமரா (டம்மி) டிக்னர் என்ற பெண்ணின் மரணத்திற்கு காரண மான முதல் நிலை மோசமான மனிதக் கொலைக்காக இந்த ஆண்டு ஆரம்பத் தில் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவரது உடல் வொஷிங்டன் பூங்கா ஒன்றுக்கு அருகே ஒரு மண் பாதையில் கண்டெடுக்கப்பட்டது.

வழக்கறிஞர்கள், குற்ற ஒப்புதலுக்கு ஈடாக 10 ஆண்டு சிறை தண்டனையை ஒப்புக்கொண்டனர், இதில் 85 சதவீதம் பரோல் இல்லாமல் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமர்செட் கவுண்டி வழக்கறிஞர் அலுவலகம், கடந்த வாரம் அவர் முறையாக தண்டனை விதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு, இந்த பழைய வழக்கில் ஒரு முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டது. ஆதாரங்கள் மீண்டும் டி.என்.ஏ பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது, அவை கிரெட்டருடன் தொடர்புபட்டவை என்பது நிரூபணமானது.

அவர் 2002ஆம் ஆண்டு வின்னிபெக்கிற்கு குடிபெயர்ந்திருந்தார்.

வழக்கறிஞர் அலுவலகத்தின் சமூக



ஊடக பதிவு ஒன்றில், 2024ஆம் ஆண்டு வின்னிபெக்கில் கிரெட்டர் கைது செய்யப்பட்டபோது, “கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக இந்த நாள் நடக்கும் என்று நான் பயங்கரமான கனவுகளை கண்டிருக்கிறேன்” என்று கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக, அமெரிக்காவை முழுமையாக புறக்கணிப்பதென கனேடியர்கள் பலர் முடிவு செய்துள்ளார்கள்.

எந்தப் பொருளை வாங்கினாலும், அது கனேடிய தயாரிப்பு தானா என்பதை உறுதி செய்துகொள்ளப்போகிறேன் என்கி றார் ரீட்டா பெய்லி என்னும் பெண்.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியானதுமே அமெரிக்கப் பொருள்களைப் புறக்கணிக்கத் துவங்கிவிட்டதாகக் கூறும் லாரி ஷார்ப் என்பவர், தற்போது மீண்டும் ட்ரம்ப் வரிகளை உயர்த்தியுள்ளதைத் தொடர்ந்து தானும் தன் மனைவியும் கனேடிய பொருட்களை மட்டுமே வாங்குவதில் புரட்சியாளர் களாக மாறிவிட்டதாகத் தெரிவிக்கிறார்.

அதுமட்டுமின்றி, அமெரிக்க எல்லையிலிருந்து 20 நிமிட பயண தூரத்தில்தான் வாழ்கிறது லாரி குடும்பம். இருந்தாலும், இனி எல்லை கடப்பதில்லை என்கிறார் லாரி.

உள்ளூர் சந்தியிலிருந்து மட்டுமே பொருட்களை வாங்க முழுமையாக முயற்சிக்கிறேன் என்று கூறும் கேரன் மவுண்ட், கனேடிய தயாரிப்புகள் கிடைக்காவிட்டால் வேறு நாட்டு பொருள் களை வாங்குவேனேயொழிய அமெரிக்கப் பொருள்களை வாங்கமாட்டேன் என்கிறார்.

இன்னும் பல கனேடியர்கள், இனி, வாழ்நாள் முழுவதும், கனேடிய பொருட்களை வாங்கப்போவதும் இல்லை, கனடா வுக்குப் பயணிக்கப்போவதும் இல்லை, நாங்கள் கோபமாக இருக்கிறோம் என்கிறார்கள்.

## கனடாவின் ஒன்றா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த புதிய தரவு களை வெளிப்படுத்துகிறது.

கடந்த ஆண்டு மருத்துவ நிபுணரிடம் முதல் மதிப்பீட்டிற்காக சென்ற ஒன்ராறியோ மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர், முதல் சந்திப்பிற்காக காத்திருந்த நேரம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அறிக்கையின்படி, 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 10.8 மில்லியன் கனடியர்கள் கடந்த ஆண்டு மருத்துவ நிபுணரிடம் முதல் ஆலோசனைக்காக சென்றதாக தெரிவித்தனர்.

இதில், 35 சதவீதம் பேர் ஒரு மாதத்திற்கும் குறைவாக காத்தி ருந்ததாகவும், 40 சதவீதம் பேர் ஒரு மாதம் முதல் மூன்று மாதங் களுக்கு குறைவாகவும், 36 சதவீதம் பேர் மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேல் காத்திருந்ததாகவும் கூறியுள்ளனர்.

கியூபெக் மாகாணத்தில் 42 சதவீதம் பேர் ஒரு மாதத்திற்குள் மருத்துவ நிபுணரை சந்தித்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில், ஒன்றாறியோவில் இது 33 சதவீதமாக காணப்பட்டது.

மொத்தத்தில், கனடியர்களில் பாதிக்கும் குறைவானவர்கள் (சுமார் 45.6 சதவீதம்) காத்திருப்பு நேரத்தை திருப்திகரமாக அல்லது மிகவும் திருப்திகரமாக கருதியதாகவும், 34.2 சதவீதம் பேர் அதிருப்தி அல்லது மிகவும் அதிருப்தி அடைந்ததாகவும் தெரிவித்தனர்.

ஒன்றாறியோவில் இந்த திருப்தி அளவு தேசிய சராசரியை விட சற்று குறைவாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.